ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,102 — 1960 අප්‍රේල් 8 වැනි සිකුරාදා — 8.4.1960

12,102 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 85 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 86 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் பரீட்சை—ஒக்ரோபர், 1959

கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் 1959 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் நியமனப் பரீட்சையில் சித்தியடைந்து, தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென்பதை இதனுல் அறிவிக்கிறேன்.

| பெயர் | விலாசம் |
|---|---|
| அத்துலுகம ஏ. பி. | தபாற் கந்தோர்ச் சேமிப்பு வங்கி, கொழும்பு. |
| அபயரத்ன் பண்டா டீ. எம். | புலத்வத்தை வளவு, உடுகொடை, வத்தேகமம. |
| அருளானந்தம். எம் | வாசிப்புப் பகுதி, அரசாங்க அச்சகம், கொழும்பு. |
| இராசையா வி. | உப-தபாற் கந்தோர், நாச்சிமார் கோவிலடி. |
| இராஜபக்ச டீ. ஜீ. ஏ. | 81, சிலாப வீதி, நீர்கொழும்பு. |
| உருத்திரசிங்கம் என். | விஜயசிங்கம் மேற்பார்த்து, தவறுகை இலா உண்ணுட்டு வரிப்பகுதி, கொழும்பு. |
| ஏதிரிவீர கே. டபிள்யூ. | பீட்ரோகுறுப், நுவரேலியா. |
| கருணுரத்ன ரீ. எம். | மெக்ரோ காரியாலயம், வதுளை. |
| கமலத் டீ. சீ. | இம்புலகேன லியன்வெலே, பாறுக்கை. |
| சிறிஸ்ரியன் எம். | 27, 6 ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். |
| குணபாலா ஆர். ஏ. | இறக்கலகண்டா, அளவை. |
| குணசேன என். வி. கே. எம். டி. | பல்லவத்தை, சிறிமாவத்தை, நாய்மன்ன, மாத்தறை. |
| குடாபண்டா ரீ. | 94, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். |
| குலதாசா எச். கே. ஏ. | செலவுக் கிளை, பிரதம தபாற் கந்தோர், கொழும்பு. |
| கேரகல டி. ஆர். ஏ. | தபாற் கந்தோர், பண்டாரகமம். |
| கொடிக்கார என். ரீ. | தபாற் கந்தோர்த் தலைமை அதிபதியின் காரியாலயம், பிரதம தபாற்கந்தோர், கொழும்பு |
| சந்திபாலா டி. பீ. எல். | 284 மேல்த் தெரு, இறக்குவனை. |
| சமரசிங்க டபிள்யூ. டி. என். | தபாற் கந்தோர், பொல்காவலை. |
| சக்காரியாஸ் எம். | " சங்கரவாசம் " கந்தரோடை, சுன்ணுகம். |
| சரிபுடீன். எம். கே. எம். | அரசினர் முஸ்லீம் பாடசாலை, அம்பான்தோட்டை. |
| சிறிசோமா ஆர். எம். எல். | பின்னடுவை, வட்டுகெதறை, அம்பலாங்கொடை. |
| சிதம்பரநாதர். கே. | கைதடி வடக்கு, கைதடி. |
| சிவப்பிரகாசம். எஸ். வி. | கணக்குப் பகுதி, தபாற் பெட்டி இல. 540, கொழும்பு. |
| சிறீ. றங்கராஜா. பீ. | வள்ளியநாதம் வியூ. துன்னலை. வடக்கு, கரவெட்டி. |
| செல்வராசா எஸ். ஏ. | 80 பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். |
| ஜெயசேகரா எஸ். | பொத்துகெரை. |
| டயஸ் ஐ. எம். | உப-தபாற் கந்தோர், எம்பிலிப்பிட்டி. |
| டிவிற்றுருகம ஈ. | 851 அனுத்மாவத்தை வீதி, கொழும்பு 15. |
| டி அல்விஸ் ஜே. பீ. | கீம்பிளஸ்லை, பத்தேகமம. |
| டீ. சில்வா எம். கே. சீ. | தபாற் கந்தோர் அக்மீன. |
| டி சில்வா பி. டபிள்யூ. எஸ். | போகவத்தை, அம்பலாங்கொடை. |
| திருநாவுக்கரசு கே. | தபால் தந்திப் பண்டசாலை, கொழும்பு. |
| பண்டாரணுயக்கா எச். பி. | கொணடேனியா மெனிக்டிவெலை. |
| பழனி கே. எம். | அனலைதீவு. |
| பர்ணுந்து என். சீ. | 150 ஐயமாவத்தை, களுத்துறை வடக்கு. |
| பரமசிவம் எஸ். | 61/35 டெய்யனெவ்லை, கண்டி. |
| பாலசிங்கம் எஸ். எஸ். | மவுன்காமல் கோவிலடி, வசாவிளான். |
| மானதுங்க எல். எஸ். | 5/6 விண்டாவத்தை, மயிலாகஸ்தென்னை, வதுளை. |
| முத்துக்குமாரசுவாமி எஸ். | 162 கஸ்தூரியார் வீதி, வண்ணுர்பண்ணை. |
| நிசாம் எம். எச். எம். | கீ/வலித்தரை அரசினர் முஸ்லீம்பாடசாலை, பலப்பிட்டி. |
| வகலதந்திரி டி. ஜே. | 999 காலி வீதி, களுத்துறை. |
| விஜயசூரிய டபிள்யூ. | 205/27 படவத்தோட்டை, மக்கஸ்லை, காலி. |

2. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனால் இடங்கள் காலியாக வரும் பொழுது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் 3 வருடங்களுக்கு பரீட்சார்த்தமாகவும், சேவை விதிகளுக்குக் கட்டுப்பட்டும் இருக்கும்.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 28 ந உ.

எச். ஈ. செனிவிரத்ன,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

---

**இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரித் திணைக்களம் கனிட்ட தொழில் நுட்பப்பாடசாலை, யாழ்ப்பாணம் கழகவாண்டு 1960—61**

**பாட வகுப்புகள்**

1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ந திகதியில் வெளிவந்த இலங்கை அரசாங்க வர்த்தமானியில் உள்ள அறிக்கைப்படி இழிவுக்கல்வித் தகைமை பின்வருமாறு மாற்றப்படுகிறது :—

(1) தமிழ் மொழி மூலம் நடைபெறும் வாணிபத் தகுதிப் பத்திரப் போதனையின் வகுப்பு : பின்வரும் இரு பாடங்களில் விசேட சித்தியுடன் எல்லாமாக ஆறு பாடங்களில் க. பொ. த. பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான வேறு பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் :—

(1) தமிழ்மொழி ;

(2) தமிழிலக்கியம் ;

(3) ஆரம்ப கணிதம், எண்கணிதம், வாணிபக்கணிதம் இவைகளிலொன்று.

(2) ஆங்கில மொழி மூலம் நடைபெறும் வாணிபத் தகுதிப் பத்திரப் போதனையின் வகுப்பு : பின்வரும் பாடங்களுடன் எல்லாமாக ஆறு பாடங்களில் க. பொ. த. பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான வேறு பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் :—

(1) ஆங்கிலம் ;

(2) தமிழ் ;

(3) ஆரம்ப கணிதம், எண்கணிதம், வாணிபக்கணிதம் இவைகளிலொன்று.

பிரவேச விண்ணப்பங்கள், 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 25 ந திகதி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 22 ந திகதி பிற்பகல் 4.30 மணிக்கு முன்பாக இப்பாடசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எல். எச். சுமணதாசா,
பதில் பதிவாளர்.

இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரித் திணைக்களம்,
கொழும்பு 10, 1960 ம் ஆண்டு ஏப்ரில் மீ 4 ந உ.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கமத்தொழிற்றுறை

**கரடியனாறு—சம்மாந்துறை ஆதிய இடங்களுக்கு கிடுகுகளும் மூங்கிற் கொட்டுகளும் உதவுதற்காய கேள்விகள்**

கீழ்க்கண்டனவற்றை உதவுதற்கான கேள்விகள், மட்டக்களப்பு மாவட்டக் கமத்தொழிற் களரியைச் சேர்ந்த மாவட்டக் கமத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தரால் 1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 29 ந் தேதி பிற்பகல் 2.30 மணி வரை ஏற்கப்படும் :—

| | | |
|---|---|---|
| (அ) கரடியனாறு பண்ணை | .. இரட்டைக்கிடுகுகள் (6 அடிக்கும் அதற்கும் மேற்பட்டதுமான நீளமும் 13 அங்குல அகலப்பின்னல் உள்ளவைகளும்) | 30,000 |
| சம்மாந்துறை பண்ணை | .. டை | 7,500 |
| (ஆ) கரடியனாறு பண்ணை | .. மூங்கிற் கொட்டுகள் 18″ × 4″ | 2,000 |
| டை | .. மூங்கிற் கொட்டுகள் (மஞ்சள் 18″ × 6″) | 5,000 |

மட்டக்களப்பு மாவட்டக் கமத்தொழிற்களரியிலிருக்கும் பரிபாலன உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படும் பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும். எல்லாக் கேள்விகளும் இணைப்பிரதிகள் உள்ளனவாக பூர்த்தி செய்து ஒப்பமிடப்பட்டு காகித உறைகளிலிட்டு முத்திரை வைக்கப்பட்டு அவ்வுறைகளின் இடது மேல் மூலையில் ........ தற்கான கேள்விகள் (கேள்விக்குரிய பொருளின் பெயரைக் குறிக்குக) என்று பொறிக்கப்பட்டு "பரிபாலன உத்தியோகத்தர், கமத்தொழில் மாவட்டக்களரி, மட்டக்களப்பு" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஒரு கேள்விக்கு ரூபா 10 சேமிப்புக்கட்டணமாகச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம், கேள்விக்கான இறுதி முடிவு தேதியன்று நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

இப்பத்திரத்திற்கான சேமிப்புக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் அல்லது கொழும்பிலுள்ள திறைசேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இந்தக் கேள்விப்பத்திரத்துக்காய சேமிப்புக்கட்டணம் திருப்பியளிக்கப்படும். கேள்வியிற் சித்தி பெறும் கேள்வியாளர், அவரது கேள்வி ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பத்துத் தினங்களுள் தேவையான பிணைச் சேமிப்புக்கட்டணத்தை கட்டவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்ளவோ தவறினால், அவரது கேள்விப்பத்திர சேமிப்புக் கட்டணம் பறிமுதலாக்கப்படுவதுடன் அரசினரின் இதர உரிமைகளைப் பாதிக்காத வகையில் ஒப்பந்த முறிவு செய்த கேள்வியாளர் பட்டியலிலும் இவரது பெயர் சேர்க்கப்படும்.

கேள்விகள் தபால் மூலம் பதிவு செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பதிவு செய்து கேள்விகள் தபால் மூலம் அனுப்பப்படாது விட்டால் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ குறித்த முத்திரையிடப்பட்ட கேள்வியைக் கொண்ட உறையை "கிடுகுகளும் மூங்கிற் கொட்டுகளும் உதவுதற்கான கேள்விகள் என்பதையும் உறையில் குறித்து அதனை மட்டக்களப்பு மாவட்டக் கமத்தொழிற் களரியிலுள்ள பரிபாலன உத்தியோகத்தரிடம் அல்லது கேள்வி எழுத்தரிடம் நேர்முகமாக ஒப்படைத்தல் வேண்டும்.

கேள்விகள் கிடைத்தமைபற்றிய தகவல்கள் அவை திறக்கப்படும் அன்றைத் தினத்தில் பதிவுசெய்து தபால் மூலமாக கேள்விகளை அனுப்பிய கேள்வியாளருக்கு தெரிவிக்கப்படும். கேள்வியாளர் எவராவது, கேள்விகளுக்கான முடிவு தேதியிலிருந்து நான்கு தினங்களுக்குள் பதிலைப் பெறாது விட்டால், மட்டக்களப்பு கமத்தொழில் மாவட்டக் களரியிலுள்ள பரிபாலன உத்தியோகத்தருடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது விரும்பினால், கேள்வியாளர் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர். மேலே குறிக்கப்பட்ட கேள்விகளுக்கான இறுதித் தினத்தன்று மட்டக்களப்பு கமத்தொழில் மாவட்டக் களரியிலுள்ள பரிபாலன உத்தியோகத்தர் களரியில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

கேள்விகள் அனுப்பப்படுதற்கான பத்திரங்களில் அனுப்பப்படாத கேள்விகள் அல்லது அவற்றில் திட்டமாகக் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முற்றிலும் அமையாத கேள்விகள் அங்கீகரிக்கப்படமாட்டா. கேள்வித் தொகை வீதங்கள் தெளிவாக மையினால் எழுதப்படும் ஏதாவது திருத்தங்கள் செய்யப்பட்டால் அவைகளுக்கெதிராக கேள்வியாளரால் ஒப்பமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

கேள்விகளில் கேள்வியாளர்கள் தமது பூரண முகவரிகளையும் பெரிய, தனித்தனி எழுத்துக்களில் பொறித்திருத்தல் வேண்டும்.

சித்தியடையும் கேள்வியாளர் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதுடன் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டு ஏற்கப்பட்ட விடயத்துக்குரிய முழுத் தொகையின் 5 சத வீதத்தை கமத்தொழில் அதிபருக்குச் செலுத்தப்படக் கூடிய பிணைச் சேமிப்பு நிதியாக கட்டுதலும் வேண்டும். ஒப்பந்தப்படி இவ்விடயம் திருப்திகரமாகச் செய்து முடிக்கப்பட்ட பின்னரே இச் சேமிப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும். சித்தியடைந்த கேள்வியாளர் தமது ஒப்பந்தப்படி இவ்விடயத்தை திருப்திகரமாகச் செய்து முடிக்கத் தவறினால் அவர் கட்டிய பிணைச் சேமிப்புப் பணம் அரசாங்கத்துக்காகப் பறிமுதல் செய்யப்படுவதுடன் தவறு இழைத்த ஒப்பந்தக்காரர் பட்டியலில் இவரது பெயரும் பொறிக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கு ஒட்டப்படும் முத்திரைச் செலவுகளை சித்தியடையும் கேள்வியாளரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்விகள் வரவழைக்கப்பட்டு முடிவடைந்த தினத்திலிருந்து மூன்றுவாரகாலத்துக்கு இவர்களது கேள்வித்தொகையை அங்கீகரித்தற்குரிய காலமாக கேள்வியாளர் ஒப்பியிருத்தல் வேண்டும்.

கேள்விகளில் ஏதாவது ஒன்றை அல்லது எல்லாவற்றையும் நிராகரித்தற்கும் கேள்விகளின் ஏதாவது ஒரு பகுதியை ஏற்பதற்கும் கமத்தொழில் அதிபருக்கு உரிமையுண்டு.

கேள்விகள் கேட்டனுப்பப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு, சித்தியடைந்த கேள்வியாளர், இலங்கையரை மட்டுமே தொழிலாளராக அமர்த்திக் கொள்ள வேண்டும். "இலங்கையர்" என்னும் சொல் வம்சாவழியாகவோ அல்லது பதிவு மூலமாகவோ இலங்கையின் பிரசைகளாக இருப்பவர்களைக் குறிக்கும்.

ஒப்பந்தக்காரரால் கொடுக்கப்பட்ட முகவரிக்கு நேர்முகமாகவோ அல்லது தபால் மூலமாகவோ வழங்கப்படும் எல்லாவித அறிக்கைகளும் முறைப்படி அவருக்குக் கொடுபட்டனவாகக் கணிக்கப்படும்.

தமது தொழிலாளர் எவராலாயினும் அல்லது எவருடைய சார்பிலாயினும் 1934 ம் ஆண்டின் 19 ம் இலக்க (117 ம் அத்.) தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் எவ்வித கோரிக்கைகளும் அரசாங்கத்தைப் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ளுவது ஒப்பந்தக்காரரது கடமையாகும்.

விரும்பத்தகாத தொழிலாளர் எவரையாவது தொழிலுக்கமர்த்தி அல்லது எந்தத் தொழிலாளியையாவது தொழிலுக்கு அமர்த்தித் தொழில் செய்விப்பதை தடுப்பதற்கான உரிமையைத் தனதாக அரசாங்கம் வைத்திருக்கும்.

அரசாங்கத்தின் தவறிழைத்த ஒப்பந்தக்காரர் பட்டியலில் காணப்படும் பெயரையுடைய எவருடனுவது தனிப்படவோ அல்லது எவர்களுடனுவது கூட்டாகவோ அல்லது தடை செய்வதற்குத் தகுந்த காரணம் இருப்பதாகக் கருதும் எந்த நபருடனுவதோ எவ்விதமான ஒப்பந்தமும் செய்து கொள்ளக்கூடாது.

மட்டக்களப்பு மாவட்டக் கமத்தொழில் களரியிலுள்ள பரிபாலன உத்தியோகத்தருக்கு மனுச் செய்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பேராதனை,
1960 ம் ஆடு மார்ச்சு மீ 2 ந் வ.

எம். எவ். சந்திரரத்ன,
கமத்தொழிலதிபர்.

---

## நீர்ப்பாசன இலாகா

மொனருகலை உப பகுதியிலுள்ள கம்பேகமுவத்திட்டத்தின் இரண்டாம் பருவத்தின் அணைக்கட்டல் மண் வேலைக்குரிய கேள்விப்பத்திரங்களை, 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 27 ந் திகதி காலை 10 மணிவரைக்கும், பண்டாரவளையிலுள்ள பெரும்பாக பொறியியலாளர் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் பத்திரங்கள் மொனருகலை, உப-கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். உபகந்தோரில் பிளான்கள் பார்ப்பதற்கும் வேறு விபரங்கள் அறிவதற்கும் வசதி அளிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் செய்து இரு பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்.

ஒரு கச்சேரியிலேனும் அல்லது மொனருகலை உப-கந்தோரிலேனும் ரூபா 25 கட்டுப்பணமாய் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 26.4.60 வரைக்கும் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்தோராக இருக்கவேண்டும். கையிருப்பு வேலைகள் இருப்பின், அவ்வேலைகளைப் பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடு மனுச்செய்ய வேண்டும்.

ஓ. என். சந்திரரத்தின,
நீர்ப்பாசன பொறியியலாளர்.

மொனருகலை,
1960 ம் ஆடு மார்ச்சு மீ 26 ந் வ.

---

## நீர்ப்பாசன இலாகா

மத்திய பகுதி பெரும்பாக இஞ்ஜினியரால் கீழ்க்காணும் வேலைக்கு 1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 27 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி வரையும் நீர்ப்பாசன இலாகாவில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கெதிரேயுள்ள தொகைக்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்த ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர் களின் பதிவு தொகை | | கேள்விப்பத் திரத்திற்குரிய கட்டுப்பணம் |
|---|---|---|---|
| | ரூபா | .. | ரூபா |
| இலுக் பெலஸ்ச, நுவரெலியா மாவட்டம் | 30,000.00 | .. | 50.00 |

இதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 11-4-60 திலிருந்து 25-4-60 வரையும் நீர்ப்பாசன இஞ்ஜினியர் கண்டி காரியாலயத்திலிருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. த. கந்தையா,
கண்டி நீர்ப்பாசன இஞ்ஜினியர்.

## நீர்ப்பாசனக் கந்தோர்

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர் (வவுனியா) 26.4.60 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி வரையும் வியாட்டிக் குளத்தில் மண் வேலை செய்வதற்குக் கேள்விப் பத்திரங்கள் வேண்டப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் யாவும் வடபகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் மன்னர் மாவட்டம், முருங்கனில் பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய பதிவுப் படங்கள் யாவற்றையும் மேற்காட்டிய கந்தோரில் பார்வையிடலாம்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் 25.4.60, மாலை 4.30 மணி வரையும் வினியோகிக்கப்படும். நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 40,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் வேண்டப்படும். விண்ணப்பப் பத்திரத்திற்குரிய தொகை ரூபா 50. இத்தொகையைக் கச்சேரியில் அல்லது இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம். பணம் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பப் பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உப-பிரிவு மன்னர் மாவட்ட இரிகேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னர் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆடு மார்ச்சு மீ 30 ந் வ.

---

## நீர்ப்பாசனக் கந்தோர்

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர் (வவுனியா) 26.4.60 செவ்வாய்க்கிழமை, காலை 9.30 மணி வரையும், இரு பங்களா கட்டுக் கரைக் குளத்துக் கருகாமையில் கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் வேண்டப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் யாவும் வடபகுதி நீர்ப்பாசன இஞ்சினியர், மன்னர் மாவட்டம் முருங்கனில் பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய பதிவுப்படங்கள் யாவற்றையும் மேற்காட்டிய கந்தோரில் பார்வையிடலாம்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் 25.4.60, மாலை 4.30 மணி வரையும் வினியோகிக்கப்படும். நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 17,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து, விண்ணப்பப் பத்திரம் வேண்டப்படும். விண்ணப்பப் பத்திரத்திற்குரிய தொகை ரூபா 25 இத் தொகையைக் கச்சேரியில் அல்லது இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பப் பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

4. ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு மன்னர் மாவட்ட இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னர் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆடு மார்ச்சு மீ 30 ந் வ.

## நீர்ப்பாசனக் கந்தோர்

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியர் (வவுனியா) 26.4.60, செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரையும் நான்கு-இரணைக்குடிசை (4 Nos. Twin Labour Cottage) கட்டுவதற்குக் கேள்விப்பத்திரங்கள் வேண்டப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் யாவும் வடபகுதி நீர்ப்பாசன இஞ்சினியர், மன்னர் மாவட்டம், முருங்கனில், பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய பதிவுப் படங்கள் யாவற்றையும் மேற்காட்டிய கந்தோரில் பார்வையிடலாம்

3. விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் 25.4.60 மாலை 4.30 மணி வரையும் விநியோகிக்கப்படும். நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 12,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பப் பத்திரம் வேண்டப்படும். விண்ணப்பப் பத்திரத்திற்குரிய தொகை ரூபா 25 இத்தொகையைக் கச்சேரியில் அல்லது இரிக்கேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காரருக்கே விண்ணப்பப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் யாவும் உபபிரிவு-மன்னர் மாவட்ட இரிகேசன் இஞ்சினியர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னர் மாவட்டம்.

முருங்கன்,
1960 ம் ஆு மார்ச் மீ 30 ந உ.

---

## வித்தியா பகுதி

### தமிழ்ப் பாடசாலைப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள்—1959/60

தமிழ்ப் பாடசாலைப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 29 ந் திகதி, வெள்ளிக்கிழமை, பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, வித்தியா பகுதி, (விநியோகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரில் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 28 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆு ஏப்றில் மீ 1 ந உ.

---

## வித்தியா பகுதி

### மேலைத்தேசச் சங்கீதக் கருவிகளை விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்—1959/60

மேலைத்தேசச் சங்கீதக் கருவிகள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 29 ந் திகதி பிற் பகல் 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி, விநியோகக் கிளை, வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 ". என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. தேவைப்படும் சங்கீதக் கருவித் தொகுதிகளில் எதையேனும் அல்லது எல்லாவற்றையேனும் முழுவதாக அல்லது பகுதியாக விநியோகஞ் செய்தற்கும் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம்.

4. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள், கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 28 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆு ஏப்றில் மீ 1 ந உ.

---

### கல்வித் திணைக்களத்தின் AM கிளையிலிருக்கும் " பவர் சாமாஸ் " கணக்கீட்டுப் பொறிகளைக் கொள்தற்கும் கொண்டுபோதற்குமான கேள்விப் பத்திரங்கள்

கல்வித் திணைக்களத்தின் AM கிளையிலிருக்கும் " பவர் சாமாஸ் " கணக்கீட்டுப் பொறிகளைக் கொள்தற்கும் கொண்டு போதற்குமான கேள்விப் பத்திரங்கள் வெள்ளிக்கிழமை 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 29 ந் திகதி முற் பகல் 10.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி மந்திரி காரியாலயக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோர் " வித்தியாதிபதி' விநியோகக்கிளை, வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. இவற்றில் எதையேனும் அல்லது எல்லாவற்றையேனும் கொள்தற்கும் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம்.

4. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 28 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆு ஏப்றில் மீ 1 ந உ.

---

## வித்தியா பகுதி

### பாடசாலைகளுக்கு சிங்கள நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகஞ் செய்தற்கான கேள்விப் பத்திரங்கள்—1959/60

11.3.60 ந் திகதிய அரசினர் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியாய அறிவித்தல் சம்பந்தமாய் மேலும் அறிவிப்பது.

2. மேற்குறித்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 22.4.60 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் குறித்த திகதியன்று முற் பகல் 10.30 மணிவரை கல்வி மந்திரி காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியே உள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 21 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்ன,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆு ஏப்றில் மீ 1 ந உ.

---

## கடற்றொழிற் பகுதி

### 2,500 மூடை முத்துச் சிப்பிகள் விற்பனைக்காய கேள்விகள்

2500 மூடை முத்துச் சிப்பிகள் விற்பனைக்காய கேள்விகள், கைத்தொழில் கடற்றொழில் இலாகா, செனற் சதுக்கம், கொழும்பு 1 இலுள்ள கேள்விச் சபைத் தலைவரவர்களால், 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 25 ம் திகதி 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள், கீழ்க் கைச்சாத்திடுபவரிடமிருந்து 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 22 ம் திகதி பி. ப. 3 மணி வரையும் பெறக்கூடிய பத்திரங்களில் இருக்கவேண்டும்.

கேள்வி வைப்புப் பணம் ரூ. 250

டி. ரீ. ஏ. டீ. பொன்சேக்கா,
கடற்றொழில் அதிபர்.

காலிமுகம்,
கொழும்பு 3,
1960 ம் ஆு ஏப்றில் மீ 4 ந உ.

## இலங்கை போக்குவரத்துச் சபை

### அறிவித்தல்

கொழும்பு-5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திர சபைத் தலைவர் விற்பனவுக்குள்ள இரட்டைத்தட்டு ஓம்னிபஸ் மேற்கோப்புகளை கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கு 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 20 ந் திகதி புதன்கிழமை முற் பகல் 10 மணிவரை கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

பொரல்ஸ்கமுவ, வெரஹெரை இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதம வினியோக உத்தியோகத்தரின் காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 19 ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில் இரட்டைப் பிரதிகளில் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் தேவைப்படாது.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

கொழும்பு,
1960 ம் ஆடு மார்ச்சு மீ 24 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.